## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1984, ஏப்ரில் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1984, ஏப்ரில் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : சதம் 90

# 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

[1984 ஏப்ரில் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 26/82
1610

## நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

218 ஆம் அத்தியாயத்தின் 28 ஆம், 29 ஆம் பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.

2. (இதனகத்துப் பின்னர் " முதன்மைச் சட்டவாக்கம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம், 29 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"பொப்பி முதலியனவற்றை இறக்குமதிசெய்தல், ஏற்றுமதி செய்தல் என்பவற்றிற்கெதிரானதடை.

28. பொப்பி தாவரம், கொக்கா தாவரம் அல்லது சணல் தாவரம் அல்லது அத்தகைய ஏதேனும் தாவரத்தின் விதைகள், நெற்றுகள், இலைகள், பூக்கள் அல்லது ஏதேனும் பாகம் அல்லது அவற்றின் ஏதேனும் தயாரிப்பு, இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுதலோ கொண்டுவரப்படுதலோ அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுதலோ ஆகாது.

சணல் தாவரத்திலிருந்து, பொப்பி தாவரத்திலிருந்து அல்லது கொக்கா தாவரத்திலிருந்து பெற்ற ஏதேனும் தயாரிப்பு, முதலியவற்றை உடைமையில் வைத்திருத்தல், பயன்படுத்தல் முதலியவற்றிற்கெதிரானதடை.

29. இதன் பின்னர், IV ஆம், V ஆம் அத்தியாயங்களில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஆளெவரும்—

(அ) பொதுவாக, பாங், ஹாஷிஷ் அல்லது கஞ்சா என அறியப்படும் சணல் தாவரத்திலிருந்து பெறப்படும் ஏதேனும் பிசின் அல்லது சணல் தாவரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தயாரிப்பு அல்லது பிரித்தெடுக்கப்பட்டவை அல்லது அத்தகைய பிசின் ஒரு பாகமாக அமைகின்ற வேறு ஏதேனும் தயாரிப்பு ;

(ஆ) பொதுவாக அபின், மோர்பீன் அல்லது ஏரோயின் என அறியப்படும் பொப்பி தாவரத்திலிருந்து பெறப்படும் ஏதேனும் வெளிக்கசிவு அல்லது பொப்பி தாவரத்தின் தயாரிப்பு அல்லது அதனின்று பிரித்தெடுக்கப்பட்டவை அல்லது அத்தகைய பிசின் ஒரு பாகமாக அமைகின்ற வேறு எவையேனும் தயாரிப்புகள் ; அத்துடன்

(இ) கொக்கா தாவரத்திலிருந்து பெறப் படும் எவையேனும் தயாரிப்புகள், அற்கலொயிட்டுகள் அத்துடன் உப்புகள்

என்பவற்றைச் சேகரித்தல், தயாரித்தல், பதனிடுதல், விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்ய முனைதல், உற்பத்தி செய்தல், களஞ்சியப் படுத்துதல், பெற்றுக்கொள்ளுதல் அல்லது தமதுடைமையில் வைத்திருத்தல், நுகர்தல், விநியோகித்தல் அல்லது பயன்படுத்துதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைமாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப் படுகின்றது :—

"அபின் நுகர்தல் முதலியவற்றிற்கு வளவுகளைப் பயன் படுத்தலுக்கு எதிரானதடை.

37. ஆளெவரும் அவரது உடைமையிலிருக்கும் ஏதேனும் வளவை, ஏதேனும் அபினை அல்லது அதன் ஏதேனும் தயாரிப்பை உண்ணும், புகைக்கும், களஞ்சியப்படுத்தும், நுகரும் அல்லது வழங்கும் நோக்கத்துக்கான இடமொன்றாகப் பயன்படுத்துவதற்கு அறிந்துகொண்டு சம்மதித்தல் அல்லது அனுமதித்தல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம், 50 ஆம் பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம், 50 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54அ, 54ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை, அச்சட்டவாக்கத்தின் 54அ, 54ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'அபாயகரமான அவுடதங்களை உற்பத்தி செய்தல், வியாபாரம் செய்தல், இறக்குமதி செய்தல், அல்லது ஏற்றுமதிசெய்தல்' அத்துடன் உடைமையில் வைத்திருத்தல் என்பவற்றிற்கெதிரான தடை.

54அ. (அ) ஏரோயின் அல்லது கொக்கேயின் அல்லது மோபீன் அல்லது அபின்போன்ற ஏதேனும் அபாயகரமான அவுடதத்தை உற்பத்திசெய்கின்ற ஆளெவரும் இக்கட்டளைச் சட்டத்திற்கெதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர் யூரர் சபையொன்றில்லாது, மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மரணதண்டனைத் தீர்ப்பொன்றுக்கு அல்லது ஆயுட்கால மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ;

(ஆ) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அல்லது பணிப்பாளரின் உரிமம் ஒன்றினால் அனுமதிக்கப்பட்டவாறு தவிர, அல்லது அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கவன்றி அல்லது அத்தகைய உரிமத்திற்கு இணங்கவன்றி வேறு வகையில், மூன்றும் அட்டவணையின் III ஆம் பாகத்தின் II ஆம் நிரையில் தரப்பட்டுள்ள ஏதேனும் அபாயகரமான அவுடதத்தை சொல்லப்பட்ட II ஆம் நிரையில் தரப்பட்டுள்ள தொகைக்குக் கூடுதலாக வியாபாரம் செய்கின்ற ஆளெவரும் இக்கட்டளைச் சட்டத்திற்கெதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர், யூரர் சபையொன்றில்லாது மேல்நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், அப்பாகத்தின் III ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும் ;

(இ) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அல்லது பணிப்பாளரின் உரிமம் ஒன்றினால் அனுமதிக்கப்பட்டவாறு தவிர, அல்லது அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்கவன்றி அல்லது அத்தகைய உரிமத்துக்கிணங்கவன்றி வேறு வகையில், மூன்றும் அட்டவணையின் III ஆம் பாகத்தின் II ஆம் நிரையில் தரப்பட்டுள்ள ஏதேனும் அபாயகரமான அவுடதத்தை சொல்லப்பட்ட II ஆம் நிரையில் தரப்பட்டுள்ள தொகைக்குக் கூடுதலாக இறக்குமதி செய்கின்ற அல்லது ஏற்றுமதி செய்கின்ற ஆளெவரும் இக்கட்டளைச் சட்டத்திற்கெதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர் யூரர் சபையொன்றில்லாது மேல்நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அப்பாகத்தின் III ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும் ;

(ஈ) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அல்லது பணிப்பாளரின் உரிமம் ஒன்றினால் அனுமதிக்கப்பட்டவாறு தவிர, அல்லது அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்கவன்றி அல்லது அத்தகைய உரிமத்துக்கிணங்கவன்றி வேறு வகையில், மூன்றும் அட்டவணையின் III ஆம் பாகத்தின் II ஆம் நிரையில் தரப்பட்டுள்ள ஏதேனும் அபாயகரமான அவுடதத்தை சொல்லப்பட்ட II ஆம் நிரையில் தரப்பட்டுள்ள தொகைக்குக் கூடுதலாக உடைமையில் வைத்திருக்கின்ற ஆளெவரும் இக்கட்டளைச்சட்டத்திற்கெதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர் யூரர் சபையொன்

றில்லாது மேல்நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், அப்பாகத்தின் III ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப் பட்டுள்ள தண்டத்துக்கு ஆளாதலும் வேண் டும்.

இப்பிரிவில்—

"உற்பத்தி செய்தல்" என்பது அபாயகரமான அவுடதமொன்று தொடர்பாக, அத்த கைய அவுடதத்தைத் தயாரிக்கும் ஏதேனும் படி முறையையும் அத்து டன் ஓர் அவுடதத்தை இன்னோர் அவுடத மாகக் களிம்பகற்றுதலையும் அல்லது உருமாற்றம் செய்தலையும் உள்ள டக்கும் ;

"வியாபாரம் செய்தல்" என்பது—

(அ) விற்பனை செய்தல், கொடுத்தல், பெற்றுக் கொடுத்தல், களஞ்சியப்படுத்தல், வழங்குதல், இடம் பெயர்த்தல், அனுப் புதல், ஒப்படைத்தல் அல்லது விநி யோகித்தல் ; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பிடப்பட்ட எதனை யும் செய்ய முனைதல்

என்று பொருள்படும்.

54அ என்னும் பிரிவின் கீழான தவறு புரியப்படு வதற்கு உடந்தை யாயிருத்தல்.

54ஆ. பிரிவு 54அ என்பதன்கீழ் தவறு எதுவும் புரியப்படுவதற்கு உடந்தையாயிருக் கின்ற அல்லது அத்தவறைப் புரிய எத்த னிக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் தவறு புரியப்படுதற்கு ஆரம்பநிலையானதாக அல்லது புரிதலை முன்னெடுத்துச் செல்வதாக அமை கின்ற ஏதேனும் செயலைப்புரிகின்ற ஆளெ வரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் அத்தகைய தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட தண்டனைக்கு ஆளாதலும் வேண் டும். '.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 69 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியில், "சணல் கயிறு அல்லாத அத்தகைய ஏதேனும் தாவரத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சணல் கயிறு அல்லாத அத்தகைய ஏதேனும் தாவரத்தின் ஏதேனும் பாகம் அல்லது அதன் ஏதேனும் தயாரிப்பு" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 77அ, 77ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77அ, 77ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"பகுப்பாய்வு.

77அ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத் தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 116 ஆம் பிரிவில் முரணனது எது எவ்வாறிருப்பினும், பொலிசு அலுவலர் ஒருவர், இக்கட்டளைச் சட்டத்தின் III ஆம் அல்லது V ஆம் அத்தியாயத்தின் கீழான தவறொன்று தொடர்பாக அவரால் கைப்பற்றப் படும் ஏதேனும் அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை அல்லது அவரால் எடுக்கப்படும் மாதிரியை பரிசோதனைக்காக அரசாங்கப் பகுப்பாய்வாளருக்குச் சமர்ப்பிக்கலாம்.

(2) அரசாங்கப் பகுப்பாய்வாளர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை பரிசோதனை செய்துள்ளவிடத்து, அவரது பரிசோதனையின் பெறுபேறைத் தருகின்ற அறிக்கையொன்றை, பரிசோதனைக்காக அத்தகைய அவுடதத்தை, பொருளை, தயாரிப்பை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது அதன் மாதிரியை தமக்குச் சமர்ப்பித்த பொலிசு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அவர் அதன் பிரதியொன்றைப் பொலிசு தியக்க மருந்துப்பணியகத்துக்கு அனுப்புதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பொலிசு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்று இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் விசாரணையில், விளக்கத்தில் அல்லது வேறு நடவடிக்கையில் சான்ருகப் பெறப்படுதல் வேண்டும்.

(4) எந்த அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் பரிசோதனைக்காக ஏதேனும் அவுடதம், பதார்த்தம், பொருள், தயாரிப்பு அல்லது ஏதேனும் பாகம் அல்லது மாதிரி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த அரசாங்கப் பகுப்பாய்

வாளர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் மீதான அவரது அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர் அத்தகைய அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை, தயாரிப்பை அல்லது அதன் பாகத்தை அல்லது மாதிரியை பொலிசு தியக்க மருந்துப் பணியகத்துக்கு அனுப்புதல் வேண்டும் ; அதனை அழிப்பதற்கு நீதிவானால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின்மீது அத்தகைய அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை, தயாரிப்பை அல்லது அதன் பாகத்தை அல்லது மாதிரியை அப்பணியகமானது உடனடியாக அழிப்பித்தல் வேண்டும்.

தகவல் தருநர் ஒருவரின் ஆள் அடையாளத்தைப் பாதுகாத்தல்.

77ஆ. இக்கட்டளைச் சட்டத்தின் III ஆம் அல்லது V ஆம் அத்தியாயத்தின் கீழான தவறொன்றுக்கு ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னரான எவையேனும் நடவடிக்கைகளில், நீதிமன்றம் முரணான கட்டளையொன்றை ஆக்கினாலன்றி, அத்தகையவொரு கட்டளை ஆக்கப்படுதலை நீதியானது கோருகின்றது என அது அபிப்பிராயப்படுமாயின், சாட்சி எவரும், அத்தகைய தவறு புரியப்பட்டமை தொடர்பில் தகவல் கொடுத்துள்ள தகவல்தருநரின் பெயரையும், ஆளடையாளத்தையும் வெளிவிடும் கடப்பாடு, அல்லது ஏதேனும் கேள்விக்கான மறுமொழி, தகவல் தருநரின் ஆளடையாளத்தின் கண்டுபிடிப்பிற்கு இட்டுச்செல்லுமானால் அல்லது இட்டுச் செல்லும் சாத்தியத்தைக் கொண்டிருக்குமானால் அத்தகைய கேள்விக்கு மறுமொழிகூறும் கடப்பாடு உடையவராதல் ஆகாது. ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(5) பிரிவு 54அ என்பதன் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவர் தவிர, இக்கட்டளைச் சட்டத்திற்கு எதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொவ்வொருவரும், தவறு ஒவ்வொன்றுக்கும்—

(அ) நீதிவானொருவரால் சுருக்கமுறையாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ;

(ஆ) மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்,

ஆளாதல் வேண்டும் . ".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 78 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 78அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"குறித்த சில குற்றப்பணங்களைப் பொலிசு வெகுமதி நிதியத்துக்குச் செலுத்துதல்.

78அ. இக்கட்டளைச் சட்டத்தின் III ஆம் அல்லது V ஆம் அத்தியாயத்தின் கீழ் புரியப்படும் ஏதேனும் தவறுக்காக விதிக்கப்படும் ஒவ்வொரு குற்றப்பணத்தினதும் மூன்றிலொரு பங்கு, பொலிசுக்கட்டளைச் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பொலிசு வெகுமதி நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"இழப்பிக்கப்படுதல்.

79. (1) இக்கட்டளைச் சட்டத்திற்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு எதிரான தவறொன்றுக்கு ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிமன்றமானது, எப்பொருட்கள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அப்பொருட்கள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் அத்துடன் அத்தகைய பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள படகு, கலம், வாகனம், வானூர்தி அல்லது வானில் பறக்கும் ஊர்தி அல்லது சாதனம் எதுவும், அத்தகைய குற்றத்தீர்ப்பு காரணமாக அரசுக்கு இழப்பிக்கப்படவேண்டும் எனக் கட்டளையிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு இழப்பிக்கப்பட்ட எதேனும் ஆதனம்—

(அ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்பட்டிராவிடின், அத்தகைய குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறை

யீடொன்று செய்வதற்கென விதித்துரைக்கப்படும் காலப்பகுதி முடிவுறும் தேதியிலிருந்து அரசுக்கு முற்றாக உரித்தாதலும்;

(ஆ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருக்குமாயின், அத்தகைய குற்றத்தீர்ப்பு மேன்முறையீட்டின்மீது உறுதிப்படுத்தப்படும் தேதியிலிருந்து அரசுக்கு முற்றாக உரித்தாதலும்,

வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "இயைபான குற்றத்தீர்ப்பு" என்பது எக்குற்றத் தீர்ப்பின் விளைவாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்படுகின்றதோ அக்குற்றத்தீர்ப்பு என்று பொருளாகும்.''.

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 79 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 79 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'அசற்றைலாக்கும் பதார்த்தங்களைக் கட்டுப்படுத்துதல்.

79அ. (1) அசற்றைலாக்கும் பதார்த்தமொன்றைத் தனதுடைமையில் வைத்திருக்கும் ஆளெவரும்—

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அத்தகைய பதார்த்தத்தைத் தனது உடைமையில் வைத்திருப்பதற்குத் தாம் உரிமம் பெற்றுள்ளார் என ;

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அத்தகைய பதார்த்தத்தை தனதுடைமையில் வைத்திருப்பதற்குத் தாம் அதிகாரம் பெற்றுள்ளார் என ; அல்லது

(இ) அசற்றைலாக்கும் பதார்த்தம் சட்டமுறையான ஒரு நோக்கத்திற்காகவே தனதுடைமையிலிருக்கின்றது என,

அவர் எண்பித்தாலன்றி இக்கட்டளைச் சட்டத்திற்கு எதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்கில் ஏதேனும் அசற்றைலாக்கும் பதார்த்தத்தை தமது கட்டுக்காப்பில் அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவராகக் காணப்படும் ஆளெவரும், முரணாக

அவர் எண்பித்தாலன்றி, அப்பதார்த்தத்தைத் தனதுடைமையில் வைத்திருந்தாரெனவும் அத்துடன் அப்பதார்த்தத்தின் இயல்பை அறிந்திருந்தாரெனவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "அசற்றைலாக்கும் பதார்த்தம்" என்பது, இரசாயன பாகமுறையொன்றின் மூலம் வேறொரு பதார்த்தமொன்றினுள் அசற்றையில் கூட்டமொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அசற்றையில் கூட்டங்களை ($CH_3$. Co–) புகுத்தக்கூடிய ஒரு பதார்த்தம் என்று பொருள்படும். '.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 82, 83 என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 82 ஆம், 83 ஆம் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"V ஆம் அத்தியாயத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஆட்கள் பற்றிய சிறப்பேற்பாடுகள்.

82. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 36 ஆம், 37 ஆம், 38 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், இக்கட்டளைச்சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியவராக சந்தேகிக்கப்படுகின்ற அல்லது குற்றஞ்சாட்டப்படுகின்ற ஆட்களுக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

(2) இக் கட்டளைச் சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின் கீழ் தவறொன்று புரிந்தவராக சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் எவரேனும் ஆளை பிடியாணையொன்றில்லாது கைது செய்கின்ற பொலிசு அலுவலர் ஒருவர், அவசியமற்ற தாமதமின்றியும் அத்துடன் அவர் கைது செய்யப்பட்டதிலிருந்து இருபத்து நான்கு மணி நேரத்திற்குள்ளும் வழக்கில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவர் முன்னர் அத்தகைய ஆளைக் கொணருதல் வேண்டும்.

(3) நீதிவான், பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவரின் தரத்திற்குக் குறையாத பொலிசு அலுவலரொருவரால் அல்லது அவர் இல்லாதவிடத்து அவர் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலரால், புலனாய்வு செய்யும் நோக்கத்துக்காக அத்தகைய

ஆளைக் கட்டுக்காவலில் தடுத்துவைத்தல் அவசியம் என்ற பயன்பட்ட சான்றிதழொன்று கோப்பிடப் படுவதன்மேல், ஏழு நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆள் பொலிசுக் கட்டுக்காவலில் தடுத்துவைக்கப்படுவதை அனுமதிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(4) புலனாய்வு முடிவடைவதன்மேல் அல்லது, தடுப்புக் காவலின் காலப்பகுதி முடிவுறுவதன் மேல், இவற்றுள் எதுமுதலில் நிகழ்கின்றதோ அதன்மேல், அத்தகைய ஆள் நீதிவான் முன்னர் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆளுக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

விதிவிலக்கான சூழ்நிலைகளில் தவிர 54அ அல்லது 54ஆ எனும் பிரிவுகளின் கீழான தவறுக்குப் பிணை இல்லை.

83. (1) இக் கட்டளைச்சட்டத்தின் 54அ எனும் பிரிவின் அல்லது 54ஆ எனும் பிரிவின் கீழான தவறொன்றைப் புரிந்தவராக சந்தேகிக்கப்படுகின்ற அல்லது குற்றஞ்சாட்டப்படுகின்ற ஆளெவரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேல்நீதிமன்றத்தினால் தவிர பிணையில் விடுவிக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள், அச்சட்டம் வலுவுடையதாக இருக்கும்வரை, இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்தவராக சந்தேகிக்கப்படும் அல்லது குற்றம் சாட்டப்படும் எவரேனும் ஆளுக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணையைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றும் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வட்டவணையின் I ஆம் பாகத்தின் ஆ என்னும் தொகுதிக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :—

" நொகுதி ஆ

(பிரிவுகள் 48, 51, 68)

இறக்குமதி, ஏற்றுமதி, மொத்த விற்பனே வியாபாரம், சில்லறை வியாபாரம் என்பவற்றின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் அவுடதங்கள், பதார்த்தங்கள், பொருட்கள் அல்லது தயாரிப்புகள்

அபின்

சணல் தாவரத்தின் ஏதேனும் பிரித்தெடுப்பு அல்லது குழம்பு.

மோபீனும் அதன் உப்புகளும்.

கொக்கேயின் (தொகுப்புக்குரிய கொக்கேயின் உட்பட) எக்கோனீன் அத்துடன் அவ்வவற்றின் உப்புகள்.

மோபீனின் அல்லது கொக்கேயினின் அல்லது திரவங்களாயினுஞ்சரி, திண்மங்களாயினுஞ்சரி, ஏதேனும் விகிதாசாரத்தில் மோபீனே அல்லது கொக்கேயினேக் கொண்டுள்ள சடத்துவமான ஒரு பதார்த்தத்தில் அவற்றின் உப்புகளின் ஏதேனும் கரைசல் அல்லது ஐதாக்கல் ; அத்துடன்

(மேலே சொல்லப்பட்டவாறு அத்தகைய ஒரு கரைசல் அல்லது ஐதாக்கல் அல்லாத) 1/5 வீதத்துக்குக் குறையாத மோபீனே அல்லது 1/10 வீதத்துக்குக் குறையாத கொக்கேயினே அல்லது எக்கோமைனேக் கொண்டுள்ள ஏதேனும் தயாரிப்பு, கலப்பு, பிரித்தெடுப்பு அல்லது வேறு பதார்த்தங்கள்.

அசற்றோபீன்

அசைற்றைல் மெதடோல்

அலைல்புரோடின்

அலுபாசற்றைல் மெதடோல்

அலுபாமேபுரோடைன்

அலுபாமெதடோல்

அலுபாபுரோடைன்

அம்பிற்றமைன்

அனிற்றரிடிசைன்

பென்சிதிடைன்

பீற்றுசிற்றைல் மெதடோல்

பீற்றுமெபுரோடைன்

பீற்றுமெதடோல்

பீற்றுபுரோடைன்

பீசிற்றமைட்

கஞ்சா கஞ்சா பிசினும்

குளோனிற்றசீனே

கொக்கேயின் (பென்சோயில் சீகோமைனின் மெதயில் எசுத்தர்)

கோடேயின் (மெதயில் மோபீன்)

கொடொக்சைன்

தெசோமோபீன்

டீசரி

தெக்சாம்பீற்றமைன்

வலஞ்சுழிமோராமைட்டு

ஈரம்புரோமைட்டு

ஈரெதயில் தியூம்புத்தேன்

இருபெத்சொட்சின்

இருமேனேக்சதோல்

இருமேதயில் தியம்புத்தேன்

இருஒக்ஸ்பிடைல் புடியரேட்

இருபீனொலொக்சைலேற்று

டைதபிபேனேன்

*டீ எம் எச் பி

*டீ எச் ரி

துரோத்தேபேனேல்

எக்கோனீன், எக்கோனீனுக்கும் கொக்கெயினுக்கும் மாற்றக்கூடிய அதன் எசுத்தின்களும் பெறுதிகளும்

ஈதயில் மெதயில் தியம்புத்தேன்

எத்தனேதசீன்

எதொர்பைன்

எதொக்சரைதீன்

பெந்தனைல்

பியூரேதிடைன்

எரோயின் (ஈரசிற்றைல் மோபீன்)

ஐதரோகோடோன்

ஐதரோமோபீனேல்

ஐதரோமோபோன்

ஐதரொட்சி பெத்திடீன்

சமமெதடோன்

கீற்றேபேமிடோன்

லெவோமேதோபான்

லெரோமோரேமைட்டு

லெரோபீனசைல்மோபான்

லெரோவெர்பேஒல்

*(+)—இலேசேர்ஜைதயிட்டு

மெஸ்கேலின்

மெற்றேசோசீன்

மெதடோன்

*மெதடோன்—இடைநிலை (4—சயனே—2 இருமெதயில் அமினே—4, 4—இரு பேனைல்பற்றேன்)

*மெதம்பேற்றமைன்

மெதயில் டெசோர்பீன்

மெதயில் ஈரயிதரோ மோபீன்

*மெதயில் பெனிதேற்று

சதுரைதரோகனபினேல். ".

(2) அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தின் முடிவில் பின்வரும் புதிய பாகத்தைச் சேர்ப்பதன் மூலம் :—

"பாகம் III

(பிரிவு 54 அ)

| நிரை I<br>தவறின் தன்மை | நிரை II<br>தொகைகள் | நிரை III<br>தண்டம் |
|---|---|---|
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. அபின் 500 கிறும் அதற்கு மேலும் .. | மரண தண்டனை அல்லது ஆயுட்கால மறியற்றண்டனை |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. மோபீன் 3 கிறும் அதற்கு மேலும் .. | ஷெ |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. கொக்கேயின் 2 கிறும் அதற்கு மேலும் | ஷெ |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. ஏரோயின் 2 கிறும் அதற்கு மேலும் .. | ஷெ |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. அபின் 50 முதல் 500 கிறும் வரை .. | இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அல்லது ஓராண்டிற்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமான தொரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டும். |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. ஒரு கிறுமை விஞ்சாத மோபீன் .. | பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டும். |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. மோபீன் 1 முதல் 3 கிறும் வரை .. | இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அல்லது ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டும். |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் | .. ஒரு கிறுமை விஞ்சாத ஏரோயின் .. | பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அத்துடன் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை. |

பாகம III—(தொடர்)

| நிரை I<br>தவறின் தன்மை | நிரை II<br>தொகைகள் | நிரை III<br>தண்டம் |
|---|---|---|
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் .. | ஏரோயின் 1 முதல் 2 கிரும் வரை .. | ஓரிலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அத்துடன் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை. |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் .. | ஒரு கிராமை விஞ்சாத கொக்கேயின் .. | பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டும். |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் .. | கொக்கேயின் 1 முதல் 2 கிரும் வரை | இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அல்லது ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டும். |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் .. | கஞ்சா 5 கிலோ கிரும்களும் அதற்குமேலும் | இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அல்லது இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை. |
| வியாபாரம் செய்தல், உடைமையில் வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் .. | ஐந்து கிலோ கிரும்களை விஞ்சாத கஞ்சா | இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனை. ". |